II ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,

THIRUVALLUR AT POONAMALLEE

**O.S.No. 125/2022**

Deposition of witness for the Plaintiff/PW 1
solemnly by Thiru.A.Manikandan, Junior Assistant
in accordance with the provision of Act I for 1873 on 10.02.2026

| | | | |
|---|---|---|---|
| Name | : எம்.வெங்கடேசன் | Age | : |
| Father's / Husband's Name | : | | : |
| Taluk | : | Distict | : |

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

நான் 1ம் வாதி. 2ம் வாதி குணசீலன் எனது மைத்துனர். பிரதிவாதி எங்களுக்கு பணம் கொடுக்கவேண்டும். அதனை கொடுக்காததால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம். பிரதிவாதி முதலில் 11.02.2016 அன்று ரூ.3 லட்சம் கடனாக வாங்கினார். அதற்காக 2 வருடம் மாதம் ரூ.6,000/– வீதம் வட்டியை செலுத்தி வந்தார். பிறகு வீடு கட்டுவதற்கு என்று 2019 ம் ஆண்டு கூடுதலாக ரூ.7 லட்சம் கடன் வாங்கினார். முதலில் கடன் பெற்ற போது அடமான பத்திரம் எழுதி கொடுத்தாரல். ரூ.7 லட்சம் கடன் வாங்கிய போது கடன் உறுதி பத்திரத்தை எழுதி கொடுத்தார். கடன் தொகையை ரொக்கமாக தான் கொடுத்தேன். ரூ.3 லட்சத்தை கொடுக்கும் போது பிரதிவாதியின் அப்பாவும் அக்காவும் சாட்சிகளாக கையொப்பமிட்டனர். வா.சா.ஆ.3 கடனுறுதி சீட்டை பிரதிவாதி தான் எழுதி கொடுத்தார். அதிலும் அதே சாட்சிகள் தான் கையொப்பம் இட்டுள்ளனர். ரூ.7 லட்சம் கடனுக்கு மாதம் ரூ.100/– க்கு ரூ.1.50/– வட்டியாகும். ரூ–7 லட்சத்தை எனது பெரம்பூர் திரு.வி.க நகரில் உள்ள எனது அலுவலகத்தில் வைத்து கொடுத்தேன். நான் பொய் சொல்கிறேன் என்றும் பிரதிவாதி ரூ.3 லட்சம்

கடன் பெற்ற போதே வா.சா.ஆ.3 யை வெற்று கடனுறுதி சீட்டாக கையொப்பமிட்டு வாங்கி பூர்த்தி செய்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ல் உள்ளது கார்த்தியின் கையொப்பம் ஆகும். பிரதிவாதியின் தந்தை கையொப்பமிட்ட கடன் உறுதி சீட்டு எதுவும் என்னிடம் இல்லை. கடனுறுதி சீட்டில் பிரதிவாதியின் தந்தை தான் கையொப்பமிட்டு கொடுத்தார் என்றும் வழக்கு சொத்து பிரதிவாதியின் பெயரில் இருப்பதாலும் வா.சா.ஆ.3 யை நாங்களாக தாயாரித்து கொடோம் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்து 500 சொச்சம் சதுர அடிகள் ஆகும்.

(இந்நிலையில் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக சாட்சி விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).